மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள புதுப்பட்டு ஊராட்சியில் மாவட்ட வழக்கறிஞர் அணி பொறுப்பேற்று பணியாற்றும் பாகம் எண் 58 பசும்பூர் பகுதியில் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம் எல்.ஏ வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார். இந்த வாக்கு சேகரிப்பில் கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, மதுராந்தகம் வடக்கு ஒன்றிய செயலாளர் சத்ய சாய்நாதன் துணை செயலாளர் திருஞான செல்வம் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஜெ.சரவணன், எம்.முரளி வினோத், கே.சுப்ரமணி, எஸ் சிவஞானம், டி.அன்னி பெசன்ட், ஆர்.பி.உஷா. ரஜினிகாந்த் வேலு ஜெய்சங்கர், சாய் சிவா,மகேஸ்வரன் மோகன் மற்றும் 58 வது பாகப் பொறுப்பாளர்கள் ஜெயபால், விஜயகுமார், உதயகுமார், ராஜேந்திரன், ஆர்.வாசுதேவன் ஆகியோர் உடன் சென்று வாக்கு சேகரித்தனர்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட பாகம் 12 கருணாகர சேரி ஊராட்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் வாக்கு சேகரித்தார். உடன் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், வட்ட செயலாளர்கள் மற்றும் ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

த.வெ.க. அரசு உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால்

ஆவினுக்கே பால் ஊற்றும் நிலை ஏற்படும்!

தினகரன் நாளேடு எச்சரிக்கை!

சென்னை, செப். 26-

ஆவின் பால் விநியோகத்தை சீரமைக்காவிட்டால் ஆவினுக்கே பால் ஊற்றும் நிலை ஏற்படும் என்று தினகரன் நாளிதழ் தெரிவித்துள்ளது.

ஆவின் பால் தட்டுப்பாடு குறித்து தினகரன் நாளிதழ் வெளியிட்ட சிறப்பு கட்டுரையில், நாள் ஒன்றுக்கு ஆவினுக்கு 37 லட்சம் லிட்டர் பால் தேவைப்படும் நிலையில், 27 லட்சம் லிட்டர் பாலை மட்டும் ஆவின் கொள்முதல் செய்வதாக கூறியுள்ளது. சென்னையில் நாள்தோறும் 16.5 லட்சம் லிட்டர் ஆவின் பால் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், கடந்த மாதங்களில் அதில் 25 சதவீத விநியோகம் குறைந்துள்ளது.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கடலூர் என பல்வேறு மாவட்டங்களிலும் ஆவின் பால் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. பச்சிளம் குழந்தைகள், முதியவர்கள் அருந்தும், கொழுப்பு சத்து குறைவான நீல நிற பால் பாக்கெட் கிடைப்பதிலும் சிக்கல் நிலவுகிறது. ஆவின் பால் தட்டுப்பாட்டிற்கு கொள்முதல் குறைந்ததே காரணம் என, பால்வளத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தட்டுப்பாடு நிலவும் நேரத்திலும் 5 லட்சம் லிட்டர் பால் ஆன்லைன் விற்பனை வாயிலாக தனியார் நிறுவனங்கள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

பொதுமக்களுக்கான நேரடி விநியோகத்திலேயே போதுமான பால் கிடைக்காத நிலையில், கூடுதல் அளவில் பாலை ஆன்லைன் விற்பனைக்கு அனுப்புவது தட்டுப்பாட்டை மேலும் அதிகரிக்கக்கூடும். இதனால் தான் ஆவின் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருகிறது.

உற்பத்தியாளர்களிடமிருந்து போதுமான அளவு பாலை கொள்முதல் செய்வது, பொதுமக்களுக்கான விநியோகத்தை உறுதி செய்வது மற்றும் நிறுவனத்தின் நிதி இழப்பை கட்டுப்படுத்துவது ஆகியவற்றில் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், எல்லோருக்கும் பால் வழங்கும் ஆவின் நிறுவனத்திற்கே பால் ஊற்றி மூடும் நிலை உருவாகி விடும் என்று பால் முகவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தினகரன் நாளிதழ் தெரிவித்துள்ளது.

மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் முன்னிலை!

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்கள் மதுராந்தகம் வடக்கு ஒன்றியத்தில் சென்னை வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள புக்கத்துறை, குமாரவாடி, கருணாக்கரசேரி மற்றும் நெல்லி ஆகிய ஊராட்சிகளில் 9 பாகங்களில் 26-09-2026 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீழ்கண்ட பட்டியலின்படி வாக்கு சேகரிக்க வருகிறார்!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவிப்பு!

வ.எண்	நேரம்	பாகம் எண்	பிரச்சாரம் மேற்கொள்ளும் ஊராட்சி / இடம்
	காலை 7.00 மணி		புக்கத்துறை ஊராட்சி
1		16	அம்பேத்கர் சிலை அருகில்
2		15	பஜனைகோயில் தெரு
3		14	சமத்துவபுரம்
4		13	கோடி தண்டலம்
	காலை 8.00 மணி		குமரவாடி ஊராட்சி
5		11	கோமாத்தம்மன் கோயில் அருகில்
6		11	முத்து மாரியம்மன் கோயில் அருகில்
	காலை 8.30 மணி		கருணாகரசேரி ஊராட்சி
7		12	ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில்
8		10	பள்ளியகரம்
	காலை 9.00 மணி		நெல்லி ஊராட்சி
9		8	மாரியம்மன் கோயில் அருகில்

மேற்கண்ட ஊராட்சிகளில் அந்தந்த பாகங்களுக்கு உட்பட்ட உள்ளூர் நிர்வாகிகள், தோழமைக் கட்சிகளை சார்ந்த நிர்வாகிகள் மற்றும் சென்னை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சிகளில் வாக்காளர்களை பெருமளவில் கலந்து கொள்வதற்கு உண்டான பணிகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.டி.சேகர்

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

தி.மு.க. தலைமை இலக்கிய அணி: நாகை.சந்திரபாபு தலைமையில்

மதுராந்தகம் கிராமங்கள் தோறும் தீவிர வாக்கு சேகரிப்பு!

மதுராந்தகம், செப். 26-

மதுராந்தகம் இடைத் தேர்தலில் போட்டியிடும் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆசி பெற்ற வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து புதன் கிழமை (23.09.2026) காலை முதல் மாலை வரையிலும் அதேபோல் மறுநாள் வியாழக்கி ழமை (24.09.2026) காலை முதல் மாலை வரையிலும் திண்ணை பிரச்சாரம் மற்றும் தெருமுனை பிரச்சாரம் தலைமை இலக்கிய அணி பொருளாளர் நாகை.சந்திரபாபு தலைமையில் நடந்தது.

காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளர் தொகுதி பொறுப்பாளர் க.சுந்தர் அவர்களின் ஆலோசனைப் பெற்று புதன்கிழமை (23.09.2026) அன்று மதுராந்தகம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட, கத்திரிச்சேரி, கீரல்வாடி, சோழந்தாங்கல், காவாதூர்..1, காவாதூர்..2, தச்சூர், தச்சூர் கூட்ரோடு, கீழ்க்கண்டை..1, கீழ்க்கண்டை..2, மேலகண்டை, உழுதமங்கலம், அருங்குணம், முள்ளி, கீழ்பட்டு, முருக்கம்பாக்கம், கிராமங்கள் உள்ளிட்ட சிற்றூர்களிலும்,

வியாழக்கிழமை (24.09.2026) அன்று அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வெள்ளபுத்தூர் பாப்பநல்லூர், தீட்டாளம், கோழியாளம், பெரும் கோழியாளம், கீழாமூர், பெரும் பாக்கம், ஆலப்பாக்கம், எல்.எண்டத்தூர், எல்.எண்டத்தூர் பேருந்து நிலையம், செம்பூண்டி, கிளியாநகர் மற்றும் சில சிற்றூர்களிலும் வாக்காளர்களை நேரிடியாக சந்தித்து தீவிர திண்ணை மற்றும் தெருமுனை பிரச்சாரங்களை கழக சொற் பொழிவாளர்கள், கந்திலி கரிகாலன், ஆவடி பாஸ்கர், தக்கோலம் தேவபாலன், அத்திப் பட்டு சாம்ராஜ், ஆகியோருடன் மேற்கொண்டு நடிகர் ஆட்சியின் அவல நிலையை கிராம மக்களுக்கு புரியும் படி எடுத்துக் கூறி தீவிர மாக வாக்குகள் சேகரிக்கப் பட்டது.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38, 38(அ) வட்ட கழகத்தின் சார்பாக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களுக்கு மதுராந்தகம் 12வது வார்டு உறுப்பினர் டெல்லி பாபு தலைமையில் பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், 4வது மண்டலக் குழு தலைவர் 38வது வட்ட கழக செயலாளர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, 38(அ) வட்ட கழக செயலாளர் எஸ்.எல்.சுந்தர் ஆகியோர் முன்னிலையில் ஒதுக்கப்பட்ட பிள்ளையார் கோயில் தெரு கர்ணாகரச்சேரி பகுதியில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கப்பட்டது. உடன் எஸ்.சரவணகுமார், இ.மணிமேகலை எம்.சி, எம்.விமலா, பாப்பாம்மாள், ப.தேவராஜ், ஏ.ஆனந்தன், எஸ்.கோவிந்தராஜ், ப.தாமோதரன், எஸ். கமரூதீன், எஸ். குமரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கோவை சூலூர் த.வெ.க. எம்.எல்.ஏ.வை சிறைபிடித்த பொது மக்கள்!

கோவை, செப். 26-

த.வெ.க. ஆட்சியமைத்து 5 மாதங்கள் கடந்துவிட்டன. முதலமைச்சர் விஜயும், அதிகாரிகளும் ஏராளமான சர்ச்சைகளில் சிக்கி வருகிறார்கள். சட்டம் ஒழுங்கு பாதிப்பு, மின்வெட்டு, தொழில் முதலீடு சொதப்பல் என பல்வேறு பிரச்சனைகள் எழுந்து வருகின்றன. கோவை சூலூர் எம்எல்ஏவை முற்றுகையிட்டு மக்கள் சிறை பிடித்தனர். மக்கள் எதிர்ப்பை மீறி திட்டத்திற்கான தொடக்க விழாவில் கலந்து கொண்டால் கல் வீசப்பட்டது.

கோவை மாவட்டம், சூலூர் அருகே நாகம்மநாயக்கன்பாளையம் உள்ளது. அந்தப் பகுதியில் உள்ள குட்டையை தூர்வாரி சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை நிரப்பு அரசு திட்டமிட்டது. இதற்கு அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். பல்வேறு கட்டமாக மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். குட்டையை தூர்வாருவதற்கான தொடக்க நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. சூலூர் த.வெ.க. சுகுமார் கலந்து கொண்டு தொடக்கி வைப்பதாக இருந்தது.

இதற்காக அவர் காலை நாகம்மநாயக்கன்பாளையம் சென்றார். அப்போது பொதுமக்கள் அவர் வந்த வாகனத்தை சிறை பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்படியும் சுகுமார் பின்வாங்கவில்லை. கட்சிக்காரர்கள் முன்னிலையில் சுகுமார் தூர்வாரும் பணிக்கு பூமி பூஜை போட்டார். மக்கள் கொந்தளிப்புடன் சுகுமாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒருகட்டத்தில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு அவர் மீது கல் வீசப்பட்டது. இதனால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மதுராந்தகம் (தனி) தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் அறிவுறுத்தலின்படி, மாதவரம் வடக்கு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட அச்சரப்பாக்கம் கிளியா நகர் ஊராட்சி பாகம் எண் 143க்கு உட்பட்ட பகுதிகளில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில், அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் தேவ் மற்றும் ரோம் நகர் கிளைச் செயலாளர் இ. சேகர் ஆகியோர் முன்னிலையில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு நடைபெற்றது. உத்திரமேரூர் ஒன்றிய செயலாளர் ஞானசேகர் மற்றும் 143 பாகத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் திரளாக கலந்து கொண்டார்கள்.

மதுராந்தகம் இடைத்தேர்தலை முன்னிட்டு கழக வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து குன்னத்தூர் பகுதியில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் மண்டல குழு தலைவர் டி.காமராஜ் கழக நிர்வாகிகளும் கழக தோழர்களும் பெரும் திரளாக வீடு வீடாக சென்று பொது மக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

செல்லப்பிராணிகளை கைவிட்டால் ரூ.10,000 அபராதம்!

சென்னை, செப். 26-

சென்னையில் தெரு நாய்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், தெரு நாய்களை கட்டுப்படுத்தவும், வளர்ப்பு நாய்களை தெருவில் விடுவதை தவிர்க்கவும் மாநகராட்சி புதிய உத்தரவை பிறப்பித்திருக்கிறது. உலகம் முழுவதும் ஏற்படும் ரேபிஸ் மரணங்களில் 36% இந்தியாவில் ஏற்படுவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

சென்னை மாநகராட்சியின் முடிவுக்கு எழும் விமர்சனங்கள் ரேபிஸ் நோய் பூனை, நரி, மாடு, குதிரை என பல விலங்குகளில் இருந்து பரவும் என்றாலும், இந்தியாவை பொறுத்தவரை 99% ரேபிஸ் தெருநாய்களிடமிருந்துதான் வருகிறது. எனவேதான் தெருநாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும், ரேபிஸ் நோய் பாதிப்பை தடுக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாகத்தான் தற்போது, வளர்ப்பு நாய்கள் தெருவில் கைவிடப்படுவதற்கு எதிரான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், "சென்னையில் செல்லப்பிராணிகளான நாய், பூனை உள்ளிட்டவற்றை கைவிட்டால் ரூ.10,000 அபராதம் விதிக்கப்படும்" என எச்சரிக்கப்பட்டிருக்கிறது. செல்லப்பிராணிகள் தொடர்பாக மாநகராட்சி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்த உத்தரவு வெளியிடப்பட்டிருக்கிறது.

சாலைகள், பொது இடங்களில் கைவிடப்படும் செல்லப் பிராணிகளை மாநகராட்சி பிடித்து ஆய்வு செய்யும். செல்லப்பிராணிகளிடம் உள்ள மைக்ரோசிப், ஸ்கேனர் மூலம் ஸ்கேன் செய்யப்படும். மைக்ரோசிப் எண் மூலம் உரிமையாளர் விவரம் அறிந்து அபராதம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

மதுராந்தகம் தொகுதியின் வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் ஆலோசனைபடி புக்கத்துறை ஊராட்சி கோடிதண்டலம் கிராமம் 13பாகத்தில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமையில் வட்ட செயலாளர் கலைச்செல்வன், கிளை செயலாளர் கண்ணன், மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.வி.லஷ்மிவேலு முன்னிலையில் மகளிர் அணி சார்பாக உதயசூரியன் சின்னத்தில் வீடு வீடாக சென்று வாக்குகள் சேகரிக்கப்பட்டது. உடன் மலையம்மா, மகேஸ்வரி, கோமதிபொற்செழியன், மேகலா, திருமலை உள்ளிட்ட மகளிர் அணி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.